பதிவுஎண். M. 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

இரா. செழியன்

மலர்: 19] சென்னை: மார்கழி 2 (17—12—71) வெள்ளி வெளியூர்: மார்கழி 3 (18—12—71) சனி [இதழ்: 155

எதிரியின் இழப்பு

கடந்த 14 நாள் போரில் பாகிஸ்தானின் இழப்பு வருமாறு:—

விமானங்கள்	86
டாங்கிகள்	226
போர்க் கப்பல்கள்	4
நீர்மூழ்கிகள்	2
பீரங்கிப் படகுகள்	16
இதர படகுகள்	12

வங்க தேசத்தில் நடந்த விடுதலைப் போரில் டிச. 14-ம் நாள் நிலவரப்படி இந்தியப் படையைச் சேர்ந்த 1000 பேர் கொல்லப்பட்டனர்; 2800 பேர் காயமடைந்தனர்; 89 பேர் காணாமற்போயினர்.

வங்க தேசத்துக்குத் தமிழகம் வாழ்த்து

சட்டப் பேரவையில் ஒருமனதான தீர்மானம்

உறுப்பினர்கள் நீண்ட கரவொலி-- மகிழ்ச்சி ஆரவாரம்

சென்னை, டிச. 16—

சுதந்தர வங்காள தேசம் உதயமானது குறித்துப் பாராட்டும் – வாழ்த்தும் தெரிவித்து இன்று தமிழகச் சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இத்தீர்மானததை முன்மொழிந்து பேசினார்.

தீர்மானத்தை முன்மொழிந்து முதல் வாக்கியத்தை உச்சரித்த உடனேயே அவையில் உறுப்பினர்கள் கரவொலி செய்து மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

தீர்மானத்தை முதல்வர் தொடர்ந்து படித்தபோது இடையிடையேயும் நீண்ட கரவொலிகளுடன் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

வங்காள மக்களின் உரிமைப் போர் வெற்றி பெற்றுச் சுதந்தர வங்காள தேசம் உதயமானது குறித்துத் தனது பாராட்டையும் வாழ்த்தையும் சட்டப் பேரவை தனது தீர்மானத்தின் மூலம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டது.

மேலும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டுளளதாவது:—

"மனிதாபிமான உணர்வுடன் ஆதரவினை வங்க தேச மக்களுக்கு வழங்கி – போர் வெறி பிடித்த பாகிஸ்தானுக்குப் பாடம் கற்பித்த இந்திய அரசுக்குத் தனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறது

"இன்னுயிரை ஈந்தும் தியாகங்கள் பல புரிந்தும் உதவிய வீரர்கள் அனைவருக்கும் தனது மரியாதையைத் தெரிவித்துக் கொள்கிறது.

"மலர்ந்துள்ள விடுதலைக்கு அரும்பாடுபட்ட வீரர் முஜிபுர் ரகிமானை விடுதலை செய்ய அனைத்து நாடுகளும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது.

"இந்தியாவுக்கு எதிராகவும் – பாகிஸ்தானுக்கு ஆதரவாகவும செயல்பட்ட அமெரிக்காவுக்கு கண்டனமும், இந்தியாவுக்குத் துணையாக நின்ற சோவியத் இரஷ்யாவுக்கு நன்றியும் தெரிவித்துக் கொள்கிறது."

இத்தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகையில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் போரை நிறுத்த அறிவிப்புச் செய்திருப்பது, 'இந்தியாவுக்கு மண்ணாசை இல்லை' என்பதை எடுத்துக்காட்டுகிறது.

"பாகிஸ்தான், போரைத் தொடர்ந்து நடத்துமானால் --- அதற்குச் சீனா உதவுமானால்-- இந்திய மக்களின் கரங்கள் எல்லாம் துப்பாக்கிகளாகமாறி எதிரியை வீழ்த்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"இந்தியா இந்தப் போரில் வெற்றி பெற்றிருப்பதன்மூலம், உலக அரங்கில் இந்தியா தனிச் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது."

தீர்மானத்தை முதலமைச்சர் முனமொழிந்து பேசியதும், அனைத்துக் கட்சியின் தலைவர்களும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்.

தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

வங்காள தேசத்துக்குப் பொருளாதார உதவியாம்

அமெரிக்காவின் விசித்திர அறிவிப்பு

நியூயார்க், டிச. 16—

"வங்காள தேசத்துக்கு அமெரிக்கா கணிசமான பொருளாதார உதவி அளிக்கும்" என அறிவிக்கப்படுகிறது.

ஆனால், வங்காள தேச அரசியல் சகுதிபற்றிய தனது நிலைமையில் எந்தவித மாற்றமும் இருக்காது என்றும் அமெரிக்கா கூறுகிறது.

இந்தியாவின்முடிவு

பாகிஸ்தான் அரசுக்கு அறிவிப்பு

புதுடில்லி, டிச. 16—

இன்றிரவு 8-மணிககுப் போரை நிறுதத இந்திய அரசு செய்துள்ள முடிவு, சுவிட்சர்லாந்து தூதுவரகம் மூலம் முறைப்படி பாகிஸ்தான் அரசுக்குத் தெரியப் படுத்தப்பட்டுள்ளதாக இந்திரா காந்தி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இன்றிரவு போர் நிற்குமா?

பாகிஸ்தான் ஆலோசிப்பதாகத் தகவல்

புதுடில்லி, டிச. 16—

இந்தியாவின் முடிவுப்படி இன்றிரவு 8 மணியுடன் மேற்கு அரங்கில் போர் நிறுத்தம் ஏற்படவேண்டும்; ஆனால், நேற்று வானொலியில் பேசிய யாகியா கான், 'போர் தொடர்ந்து நடைபெறும்' என்று அறிவித்திருக்கிறார்.

இன்று பகல், இராவல்பிண்டியிலிருந்து கிடைத்த ஒரு செய்தி, போரை நிறுத்துவது பற்றி பாகிஸ்தான் அரசு ஆலோசித்து வருவதாகக் கூறுகிறது.

எனினும், இன்று மாலைக்குள் பாகிஸ்தானிடமிருந்து எவ்வித பதிலும் வராது என்றே தெரிய வருகிறது.

போர் நிறுத்தமே முதற் பணி

உலக நாடுகட்கு இந்தியா வேண்டுகோள்

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் சுவரண் சிங் பேச்சு --- இரஷ்யா வற்புறுத்தல்

நியூயார்க், டிச. 17—

"போரை உடனடியாக நிறுத்தம் பாகிஸ்தானுக்கு உத்தரவிட வேண்டும்" என்று, சோவியத் இரஷ்யா ஐ. நா. அவையைக் கேட்டுக்கொண்டுள்ளது.

ஐ. நா. பாதுகாப்பு அவையில் உள்ள சோவியத் பிரதிநிதி திரு. மாலிக், ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார்; அதன் பிறகு, அவை ஒத்தி வைக்கப்பட்டது.

போரை உடனடியாக நிறுத்தும்படி பாகிஸ்தானைக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பெருவாரியான வெற்றிபெற்ற அவாமி லீக் கட்சி, வங்காள தேசத்தில் உடன் பதவியேற்கச் செய்யவேண்டும் என்றும் சோவியத் தீர்மானம் கூறுகிறது.

அமைதியை நிலைநாட்ட ஐ நா. உறுப்பு நாடுகளையெல்லாம் அவர் கேட்டுக்கொண்டார்.

ஒரே நாள் சண்டையில் 45 டாங்கிகள் நாசம்

சகர்கர் அருகில் நமது படையின் வீரச் சாதனை

புதுடில்லி, டிச. 17—

சியால்கோட் பகுதியில் -- சகர்கர் அருகில் -- பசந்தர் என்ற இடத்தில் இந்தியப் படைக்கும் -- பாகிஸ்தான் இராணுவத்துக்கும் நேற்று கடுமையான போர் நடந்தது.

டாங்கி -- பீரங்கிகளுடன் விமானங்களும் இருதரப்பிலும் தாக்குதலில் ஈடுபட்டன.

இந்தச் சண்டையில், பாகிஸ்தான் இராணுவத்தின் 45 டாங்கிகளை இந்திய வீரர்கள் உடைத்து நொறுக்கினார்கள்.

இந்தப் பகுதியில் மட்டும் இது வரை 91 டாங்கிகளை இந்தியப் படை நொறுக்கியிருக்கிறது.

மேற்குப் பாகிஸ்தானில் மட்டும் இதுவரை மொத்தம் 142 பாகிஸ்தான் டாங்கிகள் நாசமாக்கப்பட்டிருக்கின்றன; 11 டாங்கிகள் நல்ல நிலைமையில் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

வங்காள தேசத்தையும் சேர்த்துக் கணக்கிட்டால், பாகிஸ்தான் இராணுவம் இதுவரையில் இழந்த டாங்கிகள் 241.

1965-ம் ஆண்டில் இந்தியாவுக்கும் -- பாகிஸ்தானுக்கும் நடந்த போரில், சகர்கர் அருகில் பாகிஸ்தான் இராணுவத்தின் 44 டாங்கிகளை உடைத்து நொறுக்கியது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கத் திர்மானம்

அமெரிக்காவும் ஒரு தீர்மானம் கொண்டுவந்துள்ளது; இதனை ஜப்பான் வழிமொழிந்துள்ளது.

நிரந்தரமான போர் நிறுத்தம் ஏற்படவும், நிலைமை மோசமடையாமல் தடுத்து நிறுத்தவும் இத்தீர்மானம் வற்புறுத்துகிறது.

இந்தியாவின் வேண்டுகோள்

மேற்கு அரங்கில் போர் நிறுத்தம் உடனடியாகச் செயல்பட அனுமதிக்க வேண்டும் என்று இந்தியப் பிரதிநிதி சுவரண் சிங் பேசுகையில் வற்புறுத்தினார்.

"போர் நிறுத்தம் ஏற்பட்ட பிறகு மற்ற விவகாரங்களைக் கவனிக்கலாம்" என்றார் அவர்.

இந்தக் கூட்டத்தில் பாகிஸ்தான் பிரதிநிதி அவையில் இல்லை.

அமிருதசரஸ் விமானத் தளம் தாக்கப்பட்டது

மக்கள் வசிக்கும் பகுதியில் எதிரியின் குண்டுவீச்சு

புதுடில்லி, டிச. 16—

இன்று அதிகாலை மேறகுப்பாகிஸ்தான விமானங்கள அமிருதசரஸ் விமானத் தளத்தின்மீது தாககுதல் நடத்தின.

இரண்டு குண்டுகள் வீசப்பட்டன என்றாலும் அவற்றால எதையும் சேதபபடுத்த முடியவில்லை.

நேற்று மாலை குடியிருப்புப் பகுதியில் எதிரி விமானங்கள் 11 குண்டுகள் வீசின; இதனால் மூன்று குழந்தைகள்பலியாயின.

பஞ்சாபில் மக்கள் குடியிருப்புப் பகுதியில் பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் 125 பேர் இறந்தனர்; 157 பேர் காயமுற்றிருக்கின்றனர்.

சரணகதிக்குப் பின்...

புதுடில்லி, டிச. 16—

டாக்காவில் நேற்று சரணகதி நிகழ்ச்சி நடந்ததிலிருந்து வங்காள தேசத்திலுள்ள பாகிஸ்தான் படைவீரர்கள், தங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டு வருகிறார்கள்.

நேற்று பிற்பகல்2-மணியிலிருந்து நமது துருப்புகள் ஒரு முறை கூடச் சுடவில்லை.

வங்க தேசத்தில் சிவில் நிர்வாகம்

புதுடில்லி, டிச. 17—

டாக்கா விடுதலையடைந்துவிட்டது -- ஒரு சுதந்தர நாட்டின் தலைநகராக அது ஆகி விட்டது!

பச்சை -- வெள்ளை நிறம் உள்ள பாகிஸ்தான் கொடி, டாக்காவிலிருந்து மறைந்து விட்டது!

விடுதலையடைந்த வங்க தேசத்தில் சிவில் நிர்வாகம் இன்று முதல் துவங்குகிறது; இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாகச் செய்யப்படுகின்றன.

எல்லா சிவில் அதிகாரிகளும் உடனடியாகத் தத்தம் அலுவலகங்களுக்கு வந்து சேர வேண்டுமென்று வங்க தேச அரசு உத்தரவிட்டிருக்கிறது.

அதிகாரிகள் கவனமாகக் கண்காணிக்கப்படுவர் என்றும், துரோகிகள் தண்டிக்கப்படுவர் என்றும் எச்சரிக்கை தரப்பட்டிருக்கிறது.

...வட்டத்தில் முடிவு

...டைபெறும்' என்கிறார் யாகியாகான்

...வழிகாணுமாறு பாகிஸ்தானை
...- இரஷ்யா வற்புறுத்துகின்றன

புதுடில்லி, டிச. 17—

...வங்க தேசத்தில் ஆக்கிரமிப்புப் படைத் தளபதி ...ந்துவிட்டதைத் தொடர்ந்து, இந்தியா மேற்குப் ...த்துமாறு தனது படைகளுக்கு உத்தரவிட்டது; ...வ அவசரமாகக் கூடி இம்முடிவை எடுத்தது.

...தியில் போரை நிறுத்துமாறு இந்தியா அறிவித்த ...யாகியா கான் நடத்திய வானொலி உரையில், ...றும்' என்று தெரிவித்திருக்கிறார்; 'பாகிஸ்தானிட ...குதிகள் திரும்பப் பெறப்படும் வரையில் போர் ...தெரிவித்திருக்கிறார்.

...ப் போரை நிறுத்துவதாக இந்தியா அறிவித்திருக்கிறது; ...மதிக்கு வழிகாணுமாறு அமெரிக்காவும் – இரஷ்யாவும் ...ன்றன என்று தெரியவருகிறது.

...அறிவித்த அரசு அறிவிப்பாளர் ஒருவர், 'எந்தப் பகுதியை ...சை இந்தியாவுக்கு எப்போதுமே இருந்ததில்லை' என்று ...விடுதலைக்காகவே இந்தியா உதவி செய்தது; இப் ...அடைந்துவிட்டது; ஆகவே, இனிமேல் போரிடுவதில் ...னர்.

...த்த முடிவை, பாதுகாப்புச் சபையிலும் வெளிநாட்டுத் ...தெரிவித்தார்.

...ம் சிந்த வேண்டுமா?

...தளபதி சரணடைந்த மூன்றரை மணி நேரத்திற்குப் ...றுத்த உத்தரவை இந்தியா அறிவித்த பின், தலைமை ...டுத்த அறிக்கை ஒன்றில், 'வங்காள தேசம் சுதந்தர ...ப்பது பயனற்றது என நாங்கள் கருதுகிறோம்' என்று

...வதையும், அவசியமின்றி உயிர்ச் சேதம் ஏற்படுவதை ...ந முனையில் எல்லா இடங்களிலும், டிச. 17-ம் நாள் ...யிலிருந்து போரை நிறுத்துமாறு எங்கள் படையின ...இதுபோன்றே, பாகிஸ்தானிடமிருந்து உடனே பதில் ...அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

...ம்

...ழக்கொண்டாலும் அல்லது ...ந்த அரசின் உதயம் மறுக்க ...; தலைநகர் டாக்காவில் ...து.

...ருந்த மக்கள் வியப்பூட்டும்

...'போர் தொடரும்' என்று ...பாக இல்லை என்றும் கூறி

...தாம்

...வசக்தி நீர்மூழ்கி 'ஸ்காம்ப்' ...வதாகக் கூறப்படும் 7-வது ...ந்துகொள்வதற்காக வந்து ...வந்த செய்தி ஒன்று தெரி

...ந்தியா நிராகரிப்பு

...இப்போதும் தனது பகுதிக் ...வருவதாகக் குற்றஞ்சாட்டி ...ச்சாட்டை நிராகரித்தது.

...ந்திரா பாராட்டு

...ட்சது' என்ற செய்தியை ...ர் இந்திரா காந்தி அறிவித்த ...ரம் செய்து வரவேற்றனர்.

...வெற்றி மட்டுமல்ல -- சுதந் ...குலத்தின் உணர்ச்சிகளை ...என்று இந்திரா காந்தி குறிப்

...கிகளை
...வாது

...மைப்பட்டிருப்பதாகத் தெரி ...டமிருந்த தியாகிகளை இந்தியா ...ர்; அவர்களுடைய குடும் ...ரும்.

...மையில்
...த் தொடரும்

...லைமையில் வங்க தேசம் ...து பயணத்தை அமைதி ...தாகவும் அவர் தெரிவித்

...ச்சி

...நேற்று சரணடைந்த ...க இருந்தது.

...முத்திடும்போது ஜெனரல்

சங்கங்களில் சூதாட்டம்

தடுக்கப் புதிய சட்டம் வரும்

மேலவையில் முதலமைச்சர் கலைஞர் தகவல்

சென்னை, டிச. 16—

சட்டமன்ற மேலவையில் கேள்விநேரத்தின்போது, பொழுதுபோக்குச் சங்கங்களின் சூதாட்டம் நடைபெறு வதைத் தடுக்கும் வகையில் விரைவில் சட்டம் இயற்றப் படும் என்ற தகவலை முதலமைச்சர் கலைஞர் அறிவித்தார்; இது தொடர்பான கேள்வி—பதில்கள் வருமாறு:—

சாமிநாதன் (சுதந்): —"பொழுது போக்குச் சங்கங்களில் காசு பயன்படுத்தாமல்'ரம்மி' போன்ற சீட்டாட்டங்கள் ஆடினாலும், அதையும் 'சூதாட்டம்' என்று போலீசார் கைது செய்து வழக் குப் போடுகிறார்களே? சீட்டு விளையாட்டில், எது சூதாட்டம்-- எது சூதாட்டம் இல்லை' என்று அறிவிக்க முடியுமா?"

முதல்வர்:—"பொழுதுபோக்குச் சங்கங்களில், 'ரம்மி' போன்ற சீட்டு ஆட்டங்களை முதலில் காசு இல்லாமல் ஆடினாலும், 'டோக் கன்கள்' வைத்து ஆடுகிறார்கள்; பிறகு இரகசியமாகப் பணமாக மாற்றிக்கொள்கிறார்கள்."

ஆறுமுகசாமி (சோசலிஸ்ட்):— "இந்தப் பொழுதுபோக்குச் சங்கங்களுக்கு லைசென்சுக் கொடுப்பதில் தீவிரமாகக் கண் காணிக்கப்படுமா? தவறு நடத் தினால் லைசென்சு ரத்து செய்யப் படுமா?

முதல்வர்:— "இந்தப் பொழுது போக்குச் சங்கங்களின் லைசென்சை ரத்து செய்ய இப் போதுள்ள சட்டத்தில் இட மில்லை; ஆகவே, இதற்காகவும் மற்றக் காரணங்களுக்காகவும் லைசென்சை ரத்து செய்வதற்கு வசதியாகப் புதிய சட்டக்கில் விதிகள் சேர்க்க எண்ணியிருக் கிறோம்."

கிருஷ்ணசாமி நாயுடு (சிண்டி கேட்):—"இந்தப் புதிய சட்டம் விரைவில் கொண்டுவரப் படுமா?"

முதல்வர்:— "அடிக்கடி போலீ சார் இந்த மாதிரி சங்கங்களைச் சோதனையிட்டுக் கைது செய்து வழக்குகளும் போடுகிறார்கள்; இங்கு எழுப்பப்பட்ட கேள்வி-- பதில்கள் மூலமாகப் போலீசார் இன்னும் தீவிரமாக நடவடிக் கையை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்."

ஏ. ஆர். தாமோதரன்:—"சீட்டு விளையாட்டில் 'ரம்மி' ஆட்டம் சூதாட்டமா? அப்படி என்றால், எந்த விளையாட்டுதான் விளை யாடுவது? இதனுடைய உண்மை யிலேயே பொழுதுபோக்காக விளையாடுகிறவர்களுக்குச் சிரம மாகுமே?"

கிளப்புகளை வைத்துக்கொண்டு சூதாட்ட ஆரம்பித்துவிட்டார்கள்; விரைவில் இது தடுக்கப்படுமா?"

முதல்வர்:—"அந்தச் சூதாட்டம், கிராமங்களில், களக் காசி லேயே பெரிதும் சம்பாதிக்கிற வர்கள் இருக்கிறார்கள் என்ப தைத் தெரிவித்துக் கொள் கிறேன்."

வசந்தபாய் (சுயேச்சை):—"சீட்டு விளையாட்டில் 'ரம்மி' ஆட்டம் சூதாட்டம் இல்லை; மூளைத் திற னைப் பயன்படுத்தும் விளையாட்டு தான் -- என்று சுப்ரீம் கோர்ட்டே தீர்ப்புக் கூறிவிட்டதே; அதைத் தடுத்துவிட்டால், வேறு எந்த விளையாட்டுதான் நல்ல விளை யாட்டாக இருக்கிறது?"

முதல்வர்:—"கோர்ட்டுத் தீர்ப்பு அப்படி இருந்தாலும், 'பாயிண்ட்' என்று வைத்து -- அதற்குக் காசு என்று கணக் கிடும்போது, அது சூதாட்ட மாகத்தான் கருதப்படுகிறது; புதிய சட்டம் வரும்வரையில், உறுப்பினர் அந்த விளையாட் டைத் தாராளமாக விளையாடிக் கொள்ளலாம்."

நாடு காக்கும் பணிக்கு

நல்லவர்களே---
இரத்தம் தாருங்கள்

"இந்திய எல்லையில் கடும் குளிரில் -- பனிப் பாறைகளில் நடைபெறும் போரில் காயமடைந்த வீரர்களின் உயிரைக் காப்பாற்ற இரத்தம் தேவைப்படும்; அதற்கு நாட்டு மக்கள் ஏராள மாக இரத்தம் கொடுக்க வேண்டும்.

"கழகத் தோழர்கள், 'நான் -- நீ என்று போட்டி போட்டுக்கொண்டு இரத்தம் கொடுக்க முன்வர வேண்டும்.

"'என்ன அண்ணா -- எங்களையே பார்த்து இரத் தம் கொடுக்கச் சொல்கிறீர்கள்?' என்று நலிந்து மெலிந்த தோழர்கள் கேட்கக்கூடும்.

"நண்பர்களே -- தோழர்களே! உங்கள் இரத் தம்தான் மதிப்பு வாய்ந்தது. ஊர்ச் சொத் தைக் கொள்ளையடித்துக் கொழுத்துள்ளவர்க ளின் இரத்தம், காயம் பட்ட வீரர்களின் உயி ரைப் பிழைக்க வைக்க உதவாது!

"நல்லவர்களின் இரத்தம் தேவை -- தூயவர் களின் இரத்தம் தேவை -- தி. மு. க. இரத்தம் தேவை!"

---பேரறிஞர் அண்ணா

(சீன ஆக்ரமிப்பின்போது கூறியது)

திருவள்ளுவர் ஆண்டு

சென்னை, டிச. 16 -

"அரசாங்கச் சான்றேடுகளி லும் -- பதிவேடுகளிலும், 'திரு வள்ளுவர் ஆண்டு' என்று குறிக் கச் செய்யும் யோசனை ஏதாவது உண்டா?"

என்று சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் என். கிட்டப்பா வின வியபோது, அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் 'இல்லை' என்றார்.

காட்டூர் கோபால் மறுப்பு

சென்னை, டிச. 16—

தொழிலாளர் முன்னேற்றச் சங் ப் பேரவைப் பொதுச்செய லாளரும், சிம்சன் குருப் தொழிற் சாலைத் தலைவருமான காட்டூர் கோபால் அறிவிப்பதாவது:—

'அடிசன் கம்பெனித் தொழிற் சாலை தொழிலாளர்களது தொழிற் சுதாரப் பிரச்சினைக் சம்பந்தமாக தொழிலாளர் நலத் துறை அமைச் சர் என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றதில், நான் கலந்து கொள்ளவே இல்லையென்று தமிழ் நாடு ஐ. என். டி. யு. சி. தொழிற் சங்கப் பொதுச்செயலாளர் பத் திரிகைகளுக்குச் செய்தி அளித் துள்ளார்.

சிம்சன் அண்டு குருப் கம்பெனி கள் தொழிலாளர் -- குமாஸ்தாக் கள் சங்கம்தான் முதன்மையாக இருந்தும், பெரும் பாகம் வகித்தும் பேச்சுவார்த்தை நடத்தியது.

உண்மையில் ஐ. என். டி. யு. சி. தலைமையின் மட்டுமே இந்தப் பிரச்சினையை முடித்துவிட இய லாத நிலை இருப்பது பற்றி, அந்தச் சங்கத்தின் முக்கிய நிர்வாகிகளே நமது சங்கத்திற்கு நேரிடையாக வந்திருந்து, நமது சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு ஆர். பாலசுப்பிரமணியம் -- அண்ணாத் தலை வர் திரு. சந்திரன் ஆகியோரைக் கேட்டுக் கொண்டதும் இணங்க வும், அவர்களது பிரச்சினைகள் குறித்தும் நாம் தலையிட்டுப் பேச்சு வார்த்தை நடத்தினோம்; இதன் விளைவாகத்தான், அடிசன் தொழிற்சாலைத் தொழிற் தாரா தில் இந்த அளவிலாவது தீர்வு காண முடிந்தது.

உண்மை நிலைமைகள் இவ்விதம் இருக்கையில், அந்தப் பேச்சு வார்த்தைகளில் நான் கலந்து கொள்ளவே இல்லையென்று உண் மைக்கு...

தேர்தல்கள் தள்ளிவைப்பு

புதுடில்லி, டிச. 16—

மாநிலச் சட்டமன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவதை 1973 மார்ச் வரை தள்ளிவைக்க மத் திய அமைச்சரவை முடிவு செய் தது.

தமிழ்நாடு -- கேரளம் --- ஒரிசா ஆகிய 3 மாநிலங்கள் தவிர மற்ற மாநில சட்டமன்றங்களுக்கு அடுத்த ஆண்டு (1972) பிப்ரவரி மாதம் தேர்தல் நடைபெற வேண்டும்.

நெருக்கடி நிலைமை காரணமாக இதை ஓராண்டுக்குத் தள்ளி வைக்க முடிவு செய்யப்பட்டிருக் கிறது.

இதற்கு வகை செய்யும் சட்டம், நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்படும்.

காங்கிரசில் சரிகைக்...

களின் வளர்ச்சிக்காகக் கீழ்த் திசைக் கல்லூரிகள் அனைத்தை யும் இணைத்துத் தமிழ்நாட்டில் 'திருவள்ளுவர் தமிழ்ப் பல்கலைக் கழகம்' அமைக்கவேண்டும் என்று கோரும் தனியார் தீர்மானம் ஒன்றை வி. ஈசுவரமூர்த்தி சட்ட மன்ற மேலவையில் கொண்டு வந்தார்.

இதற்குப் பதிலளித்து கல்வி அமைச்சர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் கூறியதாவது:—

"தமிழ்நாட்டில் இயங்கும் 21 தமிழ்க் கல்லூரிகளையும் சேர்த் துப் பல்கலைக்கழகத் தகுதியில் கொண்டுவந்தால்தான் தமிழ் உயர் கல்விக்கென்று தனித்த பாடத் திட்ட முறையும் -- அங்கீ காரமும் -- மானிய உதவியும் கிடைக்கும்.

"தமிழுக்காகத் தனிப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்க முடியும் என்பதை நாம் ஒப்புக்கொண்ட போதிலும், இன்றையச் சூழ் நிலையில் இது அவசியமற்றது; நிதி நிலைமையைக் கருதி இது இயலாத ஒன்று; உறுப்பினர் கோரும் தமிழ்க் கல்வி போதனை அனைத்தும், இப்பொழுதுள்ள பல்கலைக்கழக அமைப்பிலேயே இருப்பதால், தனிப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தும் யோசனை இப்போதைக்கு அவசியமில்லை."

மதுவிலக்குப் பிரசார...
அமைக்கத்தேவையில்...

அரசியல் கட்சிகள் அமைத்தா...
அரசு ஆதரவு உண்டு

சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞர் அறிவி...

சென்னை, டிச. 16-

"மதுவிலக்குப் பிரசாரத்துக்கா கத் தமிழக அரசே தனிக் குழு எதையும் நியமிக்கவில்லையாயி னும், எந்த அரசியல் கட்சி யேனும் இத்தகைய குழுக்களை நியமிக்குமானால் அரசு தன் ஆதரவை வழங்கும்"

என்று முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், நேற்று சட்டப் பேரவை யில், கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

இது தொடர்பான கேள்விகளும் பதில்களும் வருமாறு:—

எம். முத்தையா, கே. ஏ. வகாப்:— "மது அருந்துவதன் தீமைகளை எடுத்துக்காட்ட ஒரு பிரசாரக் குழு அமைக்கப்பட்டுள்ளதா?"

முதல்வர்:—"தமிழ்நாடு அரசு அமைக்கவில்லை."

முத்தையா:—"மது அருந்துவ தில் உள்ள நன்மை -- தீமை இரண்டையும் எடுத்துக் கூற குழு அமைப்பது நல்லதல்லவா?"

முதல்வர்:—"இரண்டையும் கூறத் தேவையில்லை; தீமையை மட் டும் எடுத்துச் சொன்னால் போது மானது."

கே. ஏ. வகாப்:—"மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டது ஏன்?"

முதல்வர்:—"மது அருந்துவதில் உள்ள தீமைகளை மறந்து அல்ல -- நாட்டுச் சூழ்நிலையை மனதிற் கொண்டே மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டது."

என். வீராசாமி:—"எம். ஜி. ஆர். தலைமையில் அமைக்கப்பட் டுள்ள குழுவையும் எதிர்க் கட்சி யினர் கேலி செய்கிறார்களே!"

முதல்வர்:—"அது அவர்களுக்கு உள்ள உரிமை."

ஜேசு:—"எம். ஜி. ஆர். தலைமை யில் செயல்படும் குழுவைத் தமி ழக அரசு அங்கீகரித்துள் ளதா?"

முதல்வர்:—"ஒன்றை அங்கீகரிப் பது வேறு -- ஆதரிப்பது வேறு; எந்தக் கட்சி இத்தகைய முயற்சி யில் ஈடுபட்டாலும் இந்த அரசு ஆதரிக்கும்."

நரசிம்மன்:—"திரைப்படம் மூலம் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்ய முடியுமா?"

முதல்வர்:—"மக்கள் மனதைக் கவர எத்தனையோ துறைகளின் மூலம் நடவடிக்கை எடுக்க லாம்."

குமாரசாமி:— "மது அருந்துவ தில் உள்ள தீமைகளைக் குறித் துப் போர்டு எழுதி மதுக் கடை கள்முன் வைக்கலாம் அல் லவா?"

முதல்வர்:—"மதுக் கடைகளின் முன் உள்ள போர்டுகளைப் பார்ப் பதைவிட, மது அருந்தி அதனால்...

...லைக்கழகம்

சட்டப் பேரவையில் ந...

சென்னை, டிச. 1...

"தமிழைப் பயிற்று மொ... யாகக் கொண்ட கல்லூ... மாணவர்கள் உதவிச் ச... எம் பெறுகிறவர்களாயினு... அவர்களுக்கும் ஊக்க உதவி... தொகை வழங்க அரசு உத்த... விட்டுள்ளது"

என்று கல்வியமைச்சர் நா... இரா. நெடுஞ்செழியன் அவர்... சட்டப் பேரவையில், கே... நேரத்தின்போது தெரிவித்...

ஏ. சாமிதாசு:— "தமிழை ப... பயிற்று மொழியாகக் கொண்... கல்லூரி மாணவர்களுக்கு வழ... கப்படும் ஊக்க உதவித் தொ... கள் குறித்த விவரங்க... யாவை?"

அமைச்சர்:—"பி.ஏ., பி.எஸ்... பட்ட வகுப்புக்களில் தமிழ... பயிற்று மொழியாகக் கொண்... படிக்கும் மாணவர்களுக்கு ஆண்... ஒன்றுக்கு ரூ. 180 உத... தொகையும், புகுமுக வகுப்... தமிழைப் பயிற்று மொழியா... தேர்ந்தெடுத்துப் படிக்கும் மா... வர்களுக்கும் புத்தகங்கள் வா... ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 ... வித் தொகையும் வழங்குவத...

கே. ஏ. வகாப், கே. டி. கே. ... மணி ஆகியோர் கேள்விகளு... பதிலளித்த முதல்வர் கலைஞர்... யதாவது:—

"மதுவிலக்கு எடுக்கப்பட்டத... 1971-72-ல் கிட்டத்தட்ட ரூ... கோடி கூடுதல் வருவாய் ... பார்க்கப்பட்டது; 1972-7... ரூ. 20 கோடியாக இருக்... என்று எதிர்பார்க்கப்படுகி... ஆயத் தீர்வை கணக்கிடப்... வில்லை; அது கணக்கிடப்... சேர்த்தால் இவ்வாண்டின் ... வாய் சற்று அதிகமாகலாம்...

'ஸ்டவ்' அடுப்புக்கு...
தடை வருமா?

சாமிநாதன்:— "மண்ணெ... ணெய் 'ஸ்டவ்'கள் பெ...

பழம் பெரு...
புதுப்பிக்க

தமிழக அரசின்...
அமைச்சர் மு. ...

ஐ. நா. நிறுவனம் அ...

சென்னை, டிச. ...

'சிற்பச் சிறப்பும் தொன்மை... வாய்ந்த தமிழகத்துக் கோ... களைப் பழுது பார்ப்பதற்கெ... தமிழக அரசு ரூ. 4 இலட்... ஒதுக்கியிருக்கிறது"

என்று சட்டப் பேரவையில், ... நிலையத் துறை அமைச்சர் மு. ... ணப்பன் அவர்கள், கேள்வி நே... தின்போது தெரிவித்தார்.

தோப்பூர் திருவேங்கடம், ... கிட்டப்பா ஆகிய கழக உறுப்பி... கள் கேட்ட கேள்விக்கு பதில... கையில் அமைச்சர் மேற்க... வாறு கூறினார்.

எம். பி. சாரதி:—"யுனெஸ்கோ... நிறுவனத்தின் சார்பில் ... 1970—71-ல், தமிழகத்தில் ... லைக் கோயில்களுக்கு நிதியு... அளிக்கப்பட்டது?"

அமைச்சர்:—"ஐக்கிய நாடு... கல்வி -- விஞ்ஞான -- பண்பாடு... நிறுவனத்தின் சார்பில் நிதியு... அளிக்கப்படுவதில்லை; ஆனா... இந்தியாவில் தயாரிக்கப்பட... பொருட்களின் வடிவில் அ... உதவி அளிக்கப்படுகிறது; ... படி நிறுவனம், திருவரங்க... லுள்ள அரங்கநாதசுவா... கோயிலுக்கு மட்டும் ரூ. 21,... பெறுமானமுள்ள ஒருவன... தெளிக்கும் எண்ணெய் 1970... -ல் வழங்கியுள்ளது."

80,000 பேர்களுடன் சரணடைந்த நியாசி-- போர்க் கைதியாக மதிக்கப்படுவார்

ஜினீவா கோட்பாடுகளின்படி நடத்தப்படுவர் என உறுதி

புதுடில்லி, டிச. 17—

நேற்று டாக்காவில் பாகிஸ்தான் தளபதி லெப். ஜெனரல் நியாசிக்கும் – இந்திய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெகஜித் சிங் அரோராவுக்கும் இடையே ஒப்புக்கொள்ளப்பட்ட சரணகதி நிபந்தனைகள் வருமாறு :—

"வங்காள தேசத்தில் உள்ள பாகிஸ்தானித் துருப்புக்களையெல்லாம் கிழக்கு முனை இந்தியத் துருப்புகள் -- விடுதலைப் படை (முக்தி வாகினி) கூட்டுத் தளபதி லெப். ஜெனரல் அரோராவிடம் சரணடைய பாகிஸ்தான் கிழக்குப் பகுதி இராணுவத் தலைமை ஒப்புக்கொள்கிறது.

இந்தச் சரணகதியில் எல்லாப் பாகிஸ்தான் தரை -- விமான -- கடற்படையினரும் அடங்குவார்கள்; எல்லா இராணுவத்தொடர்பான வீரர்களும், சிவிலியன் ஆயுதப் படையினரும் இதில் அடங்குவார்கள்; அவர்கள் தங்கள் ஆயுதங்களை ஆங்காங்கு ஜெனரல் அரோராவின் தலைமையின்கீழ் துருப்புக்கள் இருக்கும் இடங்களில் ஒப்படைத்துச் சரணடைவார்கள்.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதும், பாகிஸ்தான் கிழக்குப்பகுதி இராணுவத் தலைமை, ஜெனரல் அரோராவின் உத்தரவின்கீழ் வரும்.

உத்தரவுகளை மீறினால், அது சரணகதி நிபந்தனைகளை மீறுவதாகக் கருதப்பட்டு -- போர்ச் சட்டங்கள் நடைமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

சரண் நிபந்தனைகள் பற்றி சந்தேகம் எழுந்தால் லெப். ஜெனரல் அரோராவின் முடிவு இறுதியானது.

ஜெனீவா கோட்பாட்டுக்கிணங்க, சரணடைகிறவர்கள் கண்ணியத்துடனும் -- மரியாதையுடனும் நடத்தப்படுவார்கள்.

சரணடைகின்ற பாகிஸ்தான் இராணுவத்தினர் பாதுகாப்புக்கு ஜெனரல் அரோரா உறுதி கூறுகிறார்.

அந்நியர்கள்--சிறுபான்மை இனத்தினர் -- மேற்குப் பாகிஸ்தான் ஊழியர்கள் ஆகியோருக்கு ஜெனரல் அரோராவின் துருப்புகள் பாதுகாப்பு அளிக்கும்."

"பாகிஸ்தான் துருப்புகள் அல்லது அவர்களின் ஒத்துழைப்பாளர்கள் அல்லது ஆதரவாளர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் கூட்டு இராணுவத் தலைமை முடிவு செய்யும்" என்று ஓர் அதிகாரி கூறினார்.

80,000 அதிகாரிகள் -- துருப்புகள் சார்பில் நியாசி சரணடைந்தார்.

சரணகதியை ஏற்க டாக்காவுக்கு ஜெனரல் அரோரா சென்றபோது, அவருடன் கிழக்குப் பகுதி விமானப் படைத் தளபதி ஏர் மார்ஷல் திவானும்-- கிழக்குப் பகுதி கடற்படைத் தலைவர் வைஸ் அட்மிரல் கிருஷ்ணனும்--முக்தி வாகினி தளபதி கொங்தாரும் சென்றனர்.

முதல் இந்தியப் படை, நேற்று காலை 10-40 மணிக்கு டாக்காவில் நுழைந்தது; பிற்பகல் 3-50-க்கு உயர் அதிகாரிகளுடனும், 4 படைகளுடனும் டாககாவில் ஜெனரல் நக்ரா நுழைந்தார்.

"ஜெனரல் நியாசியும், மற்ற பாகிஸ்தான் தளபதிகளும் போர்க் கைதிகளாக மதிககப்படுவார்கள்" என்று டில்லியில் ஒரு ஓர் அதிகாரி கூறினார்.

முக்தி வாகினியிடம் 8 படைகள் (படாலியன்கள்) கொண்ட முறையான துருப்புகள் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

டாக்காவில் உள்ள இராசதந்திரிகள் நிலை பற்றிக் கேட்டதற்கு, அந்நியத் தூதர்கள் டாக்காவில் நடைமுறை அரசுக்குத் தூதுவர்களாக இருப்பார்கள் என்றும், அவர்கள் வங்காள தேசத்தை அங்கீகரித்தவுடன் சட்டப்பூர்வ அரசுக்குத் தூதுவர்களாக இருப்பார்கள் என்றும் அவர் சொன்னார்.

பாகிஸ்தான் துருப்புக்களைத் திருப்பியனுப்புவது பற்றிக் கேட்டதற்கு, 'சரணகதி, இரு தளபதிகள் இடையே -- இராணுவ மட்டத்தில் ஏற்பட்ட ஒப்பந்தம்' என்று அவர் பதிலளித்தார்.

வங்காள தேச அரசுக்கும்--மேற்குப் பாகிஸ்தானுக்கும் இடையே பேசவேண்டிய பிரச்சினைகள் பல இருப்பதாக அவர் கூறினார்; ஆக்கிரமிப்பாளருக்கும்--ஆக்கிரமிக்கப்பட்டவருக்கும் இடையே விவாதிப்பதற்குப் பல பிரச்சினைகள் இருக்கும்' என்றார்.

தாயகத்தின் மதிப்பை உயர்த்திய தியாகிகள்

ஆளுநர் கே. கே. ஷா பாராட்டு

சென்னை, டிச. 17—

"தாய்நாட்டின் மதிப்பைக் காக்கத் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த வீரர்களின் நினைவுதான், இந்த மகத்தான நேரத்தில் நமது மனத்தில் ஏற்படுகிறது.

"அந்த வீரர்களின் குடும்பத்தைப் பாதுகாப்போம் என்று நாம் உறுதி எடுத்துக்கொள்வோம்"

என்று தமிழ்நாடு ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் கூறினர்.

கலைஞர்சார்பில் வெற்றி மாலை

இந்திரா காந்தியிடம் மனோகரன் அளித்தார்

புதுடில்லி, டிச. 17—

போர் நிறுத்த அறிவிப்பை வெளியிடுவதற்குமுன், நேற்று இங்கு எதிர்க் கட்சித் தலைவர்களுடன் தலைமையமைச்சர் சந்தித்துப் பேசினர்.

கூட்டம் முடிந்தபின், நாடாளுமன்றத் தி. மு. க. குழுத் தலைவர் நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள், தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சார்பில் தலைமையமைச்சருக்கு வெற்றி மாலை தந்தார்; அதுபோது, கழக உறுப்பினர்களும் உடனிருந்தனர்.

இந்திரா காந்திக்குப் பாராட்டு

கழகப் பொருளாளர் எம். ஜி. ஆர். தந்தி

சென்னை, டிச. 17—

தலைமையமைச்சர் இந்திரா காந்திக்குப் பாராட்டுத் தெரிவித்து, தி. மு. கழகப் பொருளாளர் எம். ஜி. ஆர். அவர்கள் நேற்று ஒரு தந்தி அனுப்பினர்; அதில் அவர் கூறியிருப்பதாவது :—

"அறிவில் சிறந்த தங்கள் தலைமையினால், நாம் அரசியல் களத்திலும் -- போர்க் களத்திலும் அடைந்துள்ள நிகரற்ற வெற்றிக்கு உளம் நிறைந்த பாராட்டுக்கள்.

"தங்களாலும் -- நமது வீரமிக்க முப்படைகளாலும் இந்தியா பெருமைப்படுகிறது.

"மனித குலம், தங்களை என்றென்றும் மறவாது."

சென்னைக்கு மற்றொரு மருத்துவக் கல்லூரி

சென்னை, டிச. 16—

"சென்னையில் மற்றொரு மருத்துவக் கல்லூரி நிறுவும் யோசனையை அரசு பரிசிலித்து வருகிறது"

என்று, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், இன்று சட்டப் பேரவைக் கேள்விநேரத்தில் தெரிவித்தார்.

"பாளையங்கோட்டையிலுள்ள நாட்டு மருத்துவக் கல்லூரியை சென்னைக்கு மாற்றும் யோசனை இல்லை" என்றார் அவர்.

இந்தியாவின் பெருமை உயர்ந்தது

வங்க தேச வெற்றி -- முதல்வர் கலைஞர் செய்தி

சென்னை, டிச. 16—

வங்காள தேச விடுதலைப் போரில் இந்தியா பெற்ற மாபெரும் வெற்றி குறித்துத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு :—

"வங்க தேசம் உதயமாகிவிட்டது; வெற்றிச் செய்தி, நம்மையெல்லாம் களிப்பில் ஆழ்த்துகிறது; நமது படை வீரர்கள் நினைத்திருந்தால் டாக்காவை போரிட்டே பிடித்திருக்க முடியும்.

"ஆனாலும், போர்க் களத்திலும் மனிதாபிமான உணர்ச்சியோடு நடந்துகொண்டு எதிரிகளை சரணடையச் செய்து அவர்களுடைய உயிரையும் பாதுகாத்திருக்கிறார்கள்.

"இது, இந்தியாவின் பெருமையை உயர்த்துகிறது; இந்த வெற்றி, இந்திரா காந்தியின் புகழ் மகுடத்தில் ஒரு மணி முத்தாகப் பிரகாசிக்கிறது.

"இந்த வெற்றிக்கு உயிரைப் பணயமாக வைத்துப் போரிட்ட வீரர்களையெல்லாம் இந்திய மண் போற்றிப் பாராட்டுகிறது."

நிக்சனின் விருப்பம்

வாஷிங்டன், டிச. 17—

வங்காள தேசத்தில் உள்ள இந்தியப் படைகள் முழுவதும் திரும்ப அழைக்கப்பட வேண்டும் என்று விரும்புவதாக அமெரிக்க அதிபர் நிக்சன் தெரிவித்திருக்கிறார்.

பூட்டோவின் வெற்று வேட்டு !

நியூயார்க், டிச. 17—

சீனு -- பாகிஸ்தான் இடையே பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளும் பொருட்டுத் தாம் விரைவில் பிகிங் செல்லக்கூடும் என்று பூட்டோ அறிவித்திருக்கிறார்.

இலட்சியம் ஈடேறியது

இனி வங்கதேசத்தைச் சீரமைப்பதில் அவர்கள் ஈடுபட வேண்டும்

"பாகிஸ்தான் போர்க் கைதிகளை ஜெனிவா கோட்பாட்டின்படி நடத்துமாறும், வங்க தேசத்து மக்களனைவரிடமும் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளுமாறும் நமது இராணுவத்தினருக்குக் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

"விடுதலைப் படையின் தளபதிகளும் தங்களது படைகளுக்கு இத்தகைய உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

"ஜெனீவா ஒப்பந்தத்தில் கையெழுத்திட வங்க தேச அரசுக்கு வாய்ப்பு இன்னமும் அளிக்கப்படவில்லை; என்றாலும், அதன்படி நடப்பதாக அவர்களும் அறிவித்திருக்கின்றனர்.

"பழி வாங்கும் செயல்கள் எதுவும் நிகழாதவாறு தடுப்பது வங்க தேச அரசு -- விடுதலைப் படை -- இந்தியப் படை ஆகியவற்றின் பொறுப்பாகும்.

"நமது நோக்கங்கள் ஒரு வரம்புக்கு உட்பட்டவையே; வங்க தேச மக்களும் -- அவர்களது விடுதலைப் படையினரும் கொடுங்கோலாட்சியிலிருந்து அவர்களது நாட்டை விடுதலை செய்ய உதவுவதும், நமது மண்ணில் ஏற்பட்ட ஆக்கிரமிப்பை எதிர்ப்பதும் நமது நோக்கமாகும்; அவசியத்துக்குமேல் இந்தியப் படைகள் வங்க தேசத்தில் தங்கியிராது.

"பல இலட்சக்கணக்கான மக்கள் அவர்களது வீடுகளிலிருந்து நமது எல்லைக்குள் விரட்டப்பட்டனர்; அவர்கள் ஏற்கனவே தங்களது தாயகத்துக்குத் திரும்பத் தொடங்கிவிட்டனர்.

"இந்தப் போரினால் சீர்குலைந்த நாட்டைச் சீரமைத்த அந்த நாட்டு அரசும் -- மக்களும் ஒற்றுமையுடன் பாடுபட வேண்டும்.

"இந்த புதிய நாட்டின் தந்தை ஷேக் முஜிபுர் ரகிமான், அவரது மக்களிடையே உரிய இடத்தைப் பெற்று சமாதானம் -- முன்னேற்றம் -- வளம் ஆகியவற்றை நோக்கி வங்க தேசத்தை நடத்திச் செல்வார் என்று நம்புகிறோம்; அர்த்தமுள்ள -- ஆக்கபூர்வமான எதிர்காலத்தை அவர்கள் எதிர்நோக்கக்கூடிய கட்டம் வந்துவிட்டது! அவர்களுக்கு நமது நல்வாழ்த்துக்கள்!"

—தலைமையமைச்சர் இந்திரா காந்தி
(நாடாளுமன்றத்தில்)

முஜிபுர் ரகிமான் விடுதலையாகும் வரை ஓய்வில்லை

வங்க தேசத் தூதர் சௌத்ரி அறிவிப்பு

புதுடில்லி, டிச. 17—

"நமது போராட்டம் முடிவுறவில்லை; நமது தலைவர் வங்கபந்துவை (முஜிபுர் ரகிமான்) நம்மிடம் ஒப்படைக்கும் வரையில் அது ஓயாது"

என்று, புதுடில்லியில் உள்ள வங்க தேசத் தூதரசத் தலைவர் எச். ஆர். சவுத்திரி அறிவித்தார்; அவர் மேலும் தெரிவித்ததாவது :—

'இந்த வெற்றியை நாம் முழுவதுமாக அனுபவிக்க முடியவில்லை; ஏனெனில், நமது தலைவர்--நமது நாட்டுத் தந்தை முஜிபுர் ரகிமான் இன்னமும் பாகிஸ்தான் சிறையில் இருந்து வருகிறார்; அவர் விடுதலையாகும் வரையில் நமது போர் ஓயாது.

'அதுபோல், நமது நட்பு நாடான இந்தியாமீது பாகிஸ்தான் நடத்தும் தாக்குதலை நிறுத்தும் வரையிலும் நாம் ஓயப்போவதில்லை.'

தாசுதீன் அகமது

வங்க தேசத் தலைமையமைச்சர் தாசுதீன் அகமது, 'இந்த வெற்றி, ஒரு மைல் கல்லாகும்' என்றார்.

இந்தியத் தலைமையமைச்சருக்கும மக்களுக்கும் அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

நலந்தானா?

பழைய நண்பரிடம் நியாசி விசாரணை

டாக்கா, டிச. 17—

பாகிஸ்தான் தளபதி நியாசி சரணகதிப் பத்திரத்தில் கையெழுத்திட்ட குதிரைப் பந்தய மைதானத்தில் எதிர் முகாம்களைச் சேர்ந்த இருவர் மீண்டும் சந்தித்துக் கொண்டனர்.

ஒருவர்--ஜெனரல் நியாசி; மற்றவர்--முக்தி வாகினி (விடுதலைப் படை) தலைவர் கர்னல் ஷிபுல்லா; அவர், நியாசிக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

ஷிபுல்லா :—"ஐயா--நான் இரண்டாவது கிழக்கு வங்காளப்படையில் இருந்தேன்; உங்களுக்கு நினைவிருக்கிறதா ?"

நியாசி :—"ஆமாம்-ஆமாம்; உங்களை நினைவிருக்கிறது; நலந்தானா ?"

ஷிபுல்லா :—"நலமே."

நாணயங்களைப் பதுக்குவோர்

கடும் தண்டனைக்கு உள்ளாவர்

பம்பாய், டிச. 17—

பொதுமக்களும் -- வணிக நிறுவனங்களும் தங்கள்தேவைக்கு மேல் அதிகமாக நாணயங்களை வைத்துக்கொள்ளக் கூடாது என்றும், கரன்சி நோட்டுகள் அல்லது நாணயங்களை அவற்றின் மதிப்புக்கு அதிகமாக வைத்து விற்கக் கூடாது என்றும் ரிசர்வ் பாங்கி எச்சரித்துள்ளது.

"அம்மாதிரி செய்பவர்களுக்கு இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி ஐந்தாண்டுவரை சிறை அல்லது அபராதம் அல்லது சிறை--அபராதம் இரு தண்டனைகளும் விதிக்கலாம்" என ரிசர்வ் பாங்கி அறிக்கை ஒன்று கூறுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்பட்டது.